## ராப்பிய தமிழ் அகதிகள் மீது ய நாஜிக்கள் தாக்குதல்

# துயரம் துரத்துகிறது!

இன்னும் எத்தனை கொலைவெ டங்களுக்குத் தான் இலங்கைத் தமி ம் உயிரைக் காவு கொடுக்க வேண்டி ம்? சிங்களக் காடையர்களின் இனப் லைகள்; இந்திய இராணுவத்தின் ிப்பு மக்கள் திரள் கொலைகள்; இன ல முழக்கமிட்டுக் கிளம்பிய ி அமைப்புகள் துரோகத்தாலும், ாலும் நஞ்சாகிப் போய் நடத்தும் ாழிப்புகள் - இவற்றில் இருந்து எப் தப்பித்து அந்நியதேசங்களில் அர தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழர் க எப்படி உள்ளது?

கத் தமிழர்களின் தாயகம் என்று துணைக் கண்டத்திலுள்ள தமிழ் ால்லப்படுகிறது. உலகத் தமிழினத் கள், காவலர்கள், தளபதிகள் என்று ட்டிக்கொண்ட திராவிடக் கட்சிகள் ி ஆளும் மாநிலம் தமிழ்நாடு. இங் உலகிலேயே மிகக் கேவலமாக த் தமிழர்கள் நடத்தப்படுகிறார்கள்.

கனவே, ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப் ன் கீழ் இலங்கையிலிருந்து நாடு பட்ட 5 லட்சத்துக்கும் மேற்பட்ட த் தமிழர்களில் பெரும்பாலா ாயகம்' - தமிழ்நாட்டிலே கொத்தடி க்கப்பட்டு விட்டனர். அவர்களுக் துக்கப்பட்ட கோடிக்கணக்கான நிதியை, சேவை நிறுவனங்களை அரசியல் கட்சிகளையும் சேர்ந்த வாதிகள் சுருட்டிக் கொண்டனர். ள் துவங்கி, மலையகத் தமிழர்க வேலைவாய்ப்புகள் அளிப்பதாகச் தமிழக ஆலை முதலாளிகள் கோடி க ஏப்பம் விட்டனர்.

1983 ஜூலை இனப்படுகொலையைத் தொடர்ந்து லட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் தமிழகத்தில் தஞ்சம் புகுந்தனர். ஏற்கனவே 'தாயகம்' திரும்பிய மலையகத் தமிழர்களைக் கொத்தடிமைகளாக்கிய தமிழ்நாட்டில் பிறகு வந்த ஈழ அகதிகளுக்கு மட்டும் கௌரவமான வாழ்க்கை கிட்டுமா? திராவிடக் கட்சிகளின் பிழைப்புவாத அரசியலுக்குப் பயன்படுத்தப்பட்டார்கள்; ஈழப் போராளி அமைப்புகளிலேயே துரோகிகளாகவும், பாசிஸ்ட்டுகளாகவும் சீரழிந்த பிரிவினரின் வேட்டைக்கு இலக்கானார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தெற்கு ஆசிய ஆதிக்க, ஆக்கிரமிப்பு - விரிவாக்க நோக்கங்களுக்கான பணயக் கைதிகளாக - பகடைக் காய்களாக ஈழத் தமிழ் அகதிகளை பாசிச ராஜீவ் கும்பல் பயன்படுத்துகிறது.

உலகத் தமிழர்களின் தாயகம் என்று சொல்லப்படும் தமிழ்நாட்டிலேயே ஈழத்தமிழர்களுக்கு இந்தக் கதி என்றால் நிறவெறி - இனவெறி பிடித்த காலனி ஆதிக்க, ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ளவார்களின் நிலை என்ன? ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் அரபுநாடுகளிலும், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் அரசியல் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அவர்களிலே பலரும் இன விடுதலை உணர்வும், புரட்சிகர உணர்வும் உள்ளவர்கள். ஈழப் போராளி அமைப்புகளின் துரோக, பாசிச நடவடிக்கைகள் காரணமாகவும் சிங்கள பேரின ஒடுக்குமுறை, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவக் கொலைவெறி ஆகியவை காரணமாகவும் ஈழத்திலிருந்து விரட்டப்பட்டவர்கள். தற்காலிகமான வேலைவாய்ப்புகளினால் ஒப்பீட்டு ரீதியில் வசதியாக' வாழ்பவர்கள். ஆனாலும், இன விடுதலை உணர்வும், புரட்சிகர உணர்வும் குன்றாத அவர்களில் சிலர் சாத்தியமான அளவு சிறு அமைப்புகளாக இயங்குகின்றனர்.

அவற்றிலே ஒன்றுதான் சுவிசர்லாந்தில் வாழும் ஈழத்தமிழர்கள் நடத்தும் வாசகர் வட்டம். அதன் ''மனிதம்'' என்ற பத்திரிக்கையின் 1989 செப்டம்பர் இதழில் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழ்களின் வாழ்நிலை மற்றும் அவர்களுக்கு எதிரான இயக்கங்கள் குறித்து எழுதியுள்ள பகுதிகளை இங்கே தருகிறோம்:

ஐரோப்பாவின் இயந்திர வாழ்வுடன்; எங்கள் வாழ்வியலுடன் எந்தவிதத்திலும் பொருந்த முடியாத சமூக புவியியல் சூழ்நிலையுடன்; நிர்ப்பந்தமாக எம்மை இணைத்திருக்கிறோம்.

ஓர் சமூகமாக ஒன்றிப்பதற்குத் தகுதியற்றவர்களாக இருக்கிறோம். பல பத்து வருடங்கள் சென்றாலும் அரசியல் தஞ்சம் பெற்றவர்கள் உட்பட அனைவருமே இந்நாடுகளில் அரசியல் அந்தஸ்தை அதற்கான உரிமைகளை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது.

மறுபுறம்; கிட்லரினால் ஆரம்பித்த வழிநடத்தப்பட்ட தேசிய வெறியும், நிறப்பாகுபாடும் கொண்ட நாசிசக் கொள்கை புத்துயிர் பெற்று எம்மைத் துரத்திக் கொண்டிருக்கிறது.

எங்கள் பிள்ளைகளின்; சிறார்களின் நிலைமைகளோ வித்தியாசமானது. மேலும் சிக்கலானது! மேற்கத்திய சமூக வாழ்வுடன் தம்மை முழுமையாக இணைத்துக் கொள்ள முடியாமலும், எங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் சந்தர்ப்பத்தில் எங்கள் சமுதாய வாழ்வை பூரணமாக அங்கீகரிக்க மனமின்றியும், போதிய தமிழ் அறிவைப் பெற்றுக் கொள்ளாமையினாலும் எதிர்காலத்தில் விரக்திக்குட்பட்டுச் சீரழிந்து செல்லக்கூடிய நிலைமைகளில்தான் எங்கள் சிறார்கள் இங்கு வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் அந்நிய மண்ணில் எங்களுக்கு எங்கள் குழந்தைகளுக்கு என்று ஓர் எதிர்காலம் அற்ற திறந்தவெளிச் சிறைக் கைதிகளாகவே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மேலும் இதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் சுவிட்சர்லாந்து அரசு மட்டங்களில் இருந்து வெளிவந்துள்ள கூற்று ஒன்றைப் பாருங்கள்!

''தமிழ் அகதிகளை நாம் திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை அங்கு இல்லை. அதேவேளை அவர்களுக்கென்று ஓர் எதிர்காலமும் இங்கில்லை''

ஐரோப்பிய தமிழ் அகதிகள் இன்று ஒரு புதிய நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். புதிய நாஜிகளினதும் அதிதீவிர வலதுசாரிகளினதும் வளர்ச்சி இன்று அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

சுவிட்சர்லாந்தில் பல்வேறுபட்ட புதிய நாஜிக் குழுக்கள் உருவாகியுள்ளன. இங்கு முக்கியமாக நான்கு புதிய நாஜிக் குழுக்கள் உள்ளன.

(1) தாய்நாட்டு முன்னணி - இக்குழு சுவிட்சர்லாந்தின் அனைத்துப் பகுதிகளிலும் செயல்பட்டு வருகின்றது.

ர்லாந்தில் புதிய நாஜிகளின் இனவெறி ஆர்ப்பாட்டம்; வைகிங்-ஜுகெண்ட் மைப்பின் குறியீடு.



(2) புதிய முன்னணி - இக்குழு விண்டர்சர், சூரிச், பாடென், பெர்ன், ஷாஃட்சென், ப்யூலாஷ் போன்ற பகுதிகளில் இயங்கி வருகிறது.

(3) சுவிட்சர்லாந்து தேசிய புரட்சிகரக்கட்சி

(4) மேற்கண்ட மூன்று குழுக்களும் அங்கம் வகிக்கும் வைகிங் ஜுஜெண்ட் என்ற கூட்டமைப்பு. மேலும் இக்குழு துணை இராணுவப் பிரிவுகளையும் வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

''ஜெர்மனியில் இருக்கும் 'தேசிய சோசலிஸ்டுகள்' போலவும் அமெரிக்காவில் இருக்கும் கு குளக்ஸ் கிளான் (அமெரிக்க இனவெறி - வெறி அமைப்பு, புதிய நாஜிக்கள்) போலவும் நாம் இருந்தாலும், நாங்கள் நாஜிக்கள் அல்ல. மாறாக, தேசியவாதிகள்'' எனத் தெரிவித்துள்ளனர், தாய் நாட்டு முன்னணித் தலைவர்களான மார் செல்ய்ரேபெல் மற்றும் ஓட்டோ ரோய்லி ஆகியோர் ''நமது போராட்டம் அகதிகளுக்கு எதிரானதும் வெளிநாட்டவர்களுக்கு எதிரானதும் கம்யூனிசத்துக்கு எதிரானதுமான துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவது'' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சுவிட்சர்லாந்து தேசிய புரட்சிக்கட்சி 1989ம் ஆண்டு மார்ச்சு மாதம் பல்வேறு பட்ட குழுக்களை இணைத்து உருவாக்கப் பட்டது. இக்குழு ப்யூலாஷ், ஷாஃப்சென் போன்ற இடங்களில் தேர்தலில் குதிக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

புதிய முன்னணிக்குழு தலைமறைவாக இருப்பதாகவும், தமக்கும் ஜெர்மனியில் இருக்கும் புதிய நாஜிக்களான சுதந்திர ஜெர்மனிய தொழில் கட்சியுடன் தொடர்பு இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இக்குழு சென்ற வருடம் நவம்பர் மாதம் ஒன்றுகூடிய போது உருவாக்கப்பட்டதாகவும் பெர்ன் நகரில் வாழும் ஒரு மின் ஊழியர் தெரிவித்துள்ளார். இவர்கள் ''நட்புறவு'' என்ற பத்திரிக்கையை வெளியிடுகின்றனர். நாஜிக்கள் ஆண்டபோது ஒரு யூதக்குடும்பம் ஹாலந்தில் தலைமறைவாய் வாழ்ந்த கதையை நாவலாக எழுதி, சுவிட்சர்லாந்தில் நாடகமாக்கி அரங்கேற்றிய போது இந்தப் புதிய முன்னணிக்குழு அரங்கில் புகுந்து குழப்பம் விளைவித்தது. இதை வரவேற்ற ஜெர்மனிய தொழில் கட்சி, புதிய முன்னணியைத் தனது சகோதர இயக்கமாக அறிவித்துள்ளது. இவை அந்த முன்னணியின் ''நட்புறவு'' ஏட்டிலே வந்த செய்திகள்.

இவ்வகையான புதிய நாஜிக்களின் ஒருங்கிணைந்த கோஷங்கள்: ''சுவிட்சர்லாந்து சுவிஸ் நாட்டவர்களுக்குரியதே'', ''வெளிநாட்டவரே உங்கள் நாடுகளுக்குத் திரும்பிப் போ. தமிழனே வெளியேறு! யூதர்களே இஸ்ரேலுக்குத் திரும்பிப் போ! அங்கு உங்களுக்குப் போதிய இடம் உள்ளது'' ஆகியன.

இக்குழுக்கள் அனைவரும் 1983ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய ஒருங்கிணைப்புக் குழுவில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடுவது வழமை. இந்த ஒருங்கிணைப்பில் சுவிட்சர்லாந்து இனவெறிக் கட்சியான தேசிய செயல் கட்சியும் அங்கம் வகிக்கின்றது. இந்த ஒருங்கிணைப்பின் உயர் மட்டக்குழுவில் 68 வயதுடைய காஸ்டன் அரோநோனேல் என்ற பழைய பாசிஸ்டும் அங்கம் வகிக்கிறான். (இவன் ஸ்பானிய பாசிச சர்வாதிகார ஆட்சி சார்பாக ஆயுதம் ஏந்தி போராடியவன்) இந்த ஒருங்கிணைப்பு மகாநாடு சுவிஸில் உள்ள ஃரெய்பர்க் நகரில் வழமையாக நடைபெற்று வருகின்றது. மேற்கூறிய புதிய நாஜிக்களின் கருத்துக்களை உத்தியோகபூர்வமாக தேசிய செயல்கட்சி பிரதிபலிப்பு செய்கின்றது. அதன் நிறைவேற்றக்குழு அங்கத்தவரின் தபால்பெட்டி இலக்கமே தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிற்கும் பயன்படுத்தப்படுகிறது.




புதிய நாஜிக்கள்: ''மனிதம்'' ஏட்டில் வெளியான படம்.

இவ்வருடம் மே மாதம் கடைசி வாரத்தில் கண்டோன்ஜூக் என்ற இடத்தில் உள்ள தமிழர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு ஒரு தமிழர் படுகாயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சுவிட்சர்லார்ந்திலுள்ள புதிய நாஜிக் குழுக்களும் அதிதீவிர வலதுசாரிகளும் மேலும் மேற்கு ஜெர்மனியிலுள்ள புதிய நாஜிக்களுமாக நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களைக் கொண்ட விருந்துபசார விழாவினை 'தாய்நாட்டு முன்னணி' ஒருங்கமைத்திருந்தது. இவ்விழா கண்டோன்ஜூக்கில் உள்ள செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் கலந்து கொண்ட 20 மொட்டையடித்த இராணுவ கவச உடையணிந்தவர்கள் பொலீஸ் நிலையத்திற்கு மிக அண்மையில் தமிழ் அகதிகள் மீது தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலை புதிய நாஜிக்களின் விருந்துபச்சார விழாவிற்கு வந்தவர்களே செய்ததாக பத்திரிக்கைகள் அம்பலப்படுத்தியிரு இரண்டு நாட்களுக்குப்பின் கண்டோ ஜூக் குற்றத்தடுப்பு பொலீஸ் தலைமை காரி 'ஜோசஃப் ருஸ்' பத்திரிக்கையாள அபிப்பிராயத்திற்கு எதிராக அறி யொன்றை சமர்ப்பித்தார். தமிழர் மீ தாக்குதலை புதிய நாஜிக்கள் நடத்தவி யெனவும், இதனைத் தாய்நாட்டு முன்ன யின் பேச்சாளர் தமக்கு உறுதியளித்த வும், இத்தாக்குலை சாதாரண குழப்பங் செய்திருப்பதாகவும் அவர் தனது அறி யில் தெரிவித்திருந்தார்.

இப்போலீஸ் அதிகாரியின் தக பொய்மையாக்கும் விதத்தில் சம் நடந்த மூன்று நாட்களுக்குப் பின்பு பொ ரால் 20 வயதுடைய ''டேனியல் அ ஹார்டு'' என்பவர் கைது செய்யப்பட் இவர் தாய்நாட்டு முன்னணியின் நிறை றக் குழு அங்கத்தவர் என்பது நிருபண யது. இவரின் வீட்டினை சோதனை பொலீசாரால் முன்னணியின் பல இன பிரச்சாரத் துண்டுப் பிரசுரங்களும் ஆயு ளும் கைப்பற்றப்பட்டன. பொலீசார் செய்த ஆயுதங்களில் தோட்டா செ கருவியும் கைப்பற்றப்பட்டது குறிப் தக்கது.

யூலை மாதம் 2ந்தேதி 'சுர்' என இடத்தில் தமிழர் இருந்த வீடொன்றின் வைக்கப்பட்ட சம்பவம் அனைத்துத் அகதிகளையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இச்சம்பவத்தில் இரண்டு சிறுவர்கள் நான்கு தமிழ் அகதிகள் இறந்துள்ளன கோர சம்பவத்தினை புதிய நாஜிக செய்தார்கள் என்பது இப்புதிய நாஜி 'சுர்'இல் மேற்கொண்ட நடவடிக்கை உறுதி செய்வதாக அமைகின்றது.

இச்சம்பவம் நிகழ்வதற்கு வாரங்களிற்கு முன்பாக தமிழர் எதிர் கம் என உரிமை கோரியும், சுவிட்சர் சிலுவை பொறிக்கப்பட்ட துண்டுப்பிர பரவலாக விநியோகிக்கப்பட்டு இரு இதற்கு முன்னரே 'சுர்'இல் உள்ள அகதி முகாமை தீயிட எடுத்த முயற்சி வியுற்றுள்ளதும் போன்ற சம்பவங்கள் வீட்டெரிப்பில் புதிய நாஜிக்கள் சம்


பாசிச முசோலினி பாணியில் மொட்டையடித்து இராணுவ கவச உடையணிந்துள்ள புதிய நாஜி.



ா உறுதி செய்கின்றது. மேலும் யான தீவைப்பு முயற்சிகள் 'சுர்' ா இன்னொரு அகதி முகாம் மீது முறை நடந்தது. இதுபோன்று இல் 'ஓஸ்டெர்முண்டிஜென்' டத்திலும் தீவைப்பு முயற்சி நடந் பிடத்தக்கது.

புதிய நாஜிக்கள் இந்நாட்டில் ஐரோப்பியர்களுக்கெதிராக செயற் லை. மாறாக வெளிநாட்டவர் என்ற யில் ஆசிய, லத்தீன் அமெரிக்க, க்க மக்களுக்கெதிராகவே கூடுத எதிர்ப்புணர்வை காட்டுகின்றனர். வளர்வதற்கு ஐரோப்பிய அரசுக ணமாக அமைகின்றன. ஏனெனில் ஏற்படும் முக்கிய நெருக்கடிக வெளிநாட்டவர்களே முக்கிய கார ா போலிக் காரணங்களைக் கூறித் க் கொள்கின்றனர். இக்காரணங்க திய நாஜிக்கள் இலகுவாகப் பயன்ப ருகின்றனர். (தற்போது தமிழ் அகதி ான தாக்குதல்கள் அங்கொன்றும் ன்றுமாக நடைபெறுகின்றன) இவர் எதிரான பிரச்சாரங்களை இடதுசாரி ர்கொண்டு வருகின்றனர். ஆனால் ளவிட எண்ணிக்கையில் புதிய ள் அதிகமாக உள்ளனர். பிரான்ஸ் ருக்கும் 'தேசிய முன்னணி' எனும் ஜிக்கள் குழு அங்குள்ள 'கம்யூனிஸ் யைவிட 15% பலம் வாய்ந்ததாக . இவர்கள் வளர்ந்துவரும் போக் குதல்கள் பரவலாக மேற்கொள்ளப் .

ந்நிலையில் ஐரோப்பிய தமிழ் அகதி ந்தரமாக வாழலாம் என நினைப்பார் ா அது கற்பனையாகவே அமையும். இன்று ஐரோப்பாவில் பிறக்கும் குழந்தைகள் இந்நாடுகளிலேயே ற்று, தொழில் வாய்ப்புகளில் ஈடுபட ன்று எண்ணுகின்றனர். இவ்வெதிர் சாத்தியமற்றதொன்றாகும். இன்று பிய நாடுகள் தாம் விரும்பாத களையே வெளிநாட்டவர் செய்வ அனுமதி கொடுக்கப்படுகின்றது. இத ாம் அவர்களுடன் தொழில் ரீதியாக யில் நேரடியாக ஈடுபடவில்லை. இங்கு வளர்ந்துவரும் தமிழ்க் குழந் எதிர்காலத்தில் இந்நாட்டவ ர்க தொழில் வாய்ப்புகளுடன் போட்டி ன் போது நாஜிகளின் நடவடிக்கை ங்காக அதிகரிக்கும். ஒரு நாட்டில் க்சமூக அரசியல் உரிமையின்றி வாழ து. ஏனெனில் அச்சமூகம் தனது களைப் பூர்த்தி செய்வதற்கு அரசி ரிமை முக்கியமானதாகும். சுவிட்சர் ஜெர்மனி போன்ற நாடுகளில் நீண்ட க வாழும் வெளிநாட்டவர்களுக்கு ் வாக்குரிமை கூட கொடுக்கப்பட ல என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப் மிழ் அகதிகளாகிய நாம் இந்நாட்டில் னை உண்டாயின் இன்னோர் நாட் செல்லலாம் என்றால், அந்தந்த நாடுக வெவ்வேறுவிதமான பிரச்சினைக முகம் கொடுக்கவே நேரும். அவைக பார்க்கும் போது வெளிநாடுகளில் மாக வாழ முடியாது என்பதை மேற் நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ◆



## டான்செம்: ஊழலில் அதிகாரிகள்! அடக்குமுறையில் தொழிலாளர்கள்!

நாளொரு தொழில், பொழுதொரு பெருக்கம் என்று வாய்ப்பந்தல் போடும் கருணாநிதியின் ஆட்சியில், கள்ளச்சாராயத் தொழில்தான் பெருகி வருகிறது. தமிழக அரசே நடத்தும் ''டான்செம்'' எனும் சிமெண்டு - ஆஸ்பெஸ்டாஸ் உற்பத்தி செய்யும் அரசுத் துறை நிறுவனமோ மூடுவிழாவை எதிர்நோக்கி மரணப் படுக்கையில் வீழ்ந்துள்ளது.

குறிப்பாக, மாயனூரில் ஏறத்தாழ ரூ.9 கோடி மதிப்புள்ள குழாய்கள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. ஆர்டர் இல்லை என்று கூறி ஆண்டு தோறும் இரண்டு மாதம் ஆலையே இயங்குவதில்லை. இதைக் காட்டி, ஆலை நட்டத்தில் இயங்குவதால் எந்த சலுகையும் தரமுடியாது; போனசும் கிடையாது என்று அதிகாரிகள் தொழிலாளிகளை மிரட்டி ஆட்குறைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இம்மென்றால் மெமோவும், ஏன் என்றால் சஸ்பெண்டும் என அதிகாரிகளின் கொட்டம் இங்கு தலைவிரித்தாடுகிறது.

மாயனூர் நிறுவனத்தில் உள்ள தொழிற்சங்கங்களோ அப்பட்டமாக துரோகமிழைத்து கருங்காலி வேலை செய்கின்றன. ஒன்றுபட்ட தொழிற்சங்கம் 1986ல் தி.மு.க; அ.தி.மு.க. என பிளவுப்பட்ட பிறகு, அதிகாரவர்க்கம் தொழிலாளிகளை மேலும் கடுமையாக ஒடுக்கத் தொடங்கியது. 1987-ல் கூலி உயர்வு கோரி தி.மு.க. மற்றும் பொது சங்கமும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போது, அ.தி.மு.க. கருங்காலிகள் மட்டும் வேலைக்குச் சென்றனர். அப்போது ''டான்செம்'' நிறுவனத் தலைவராயிருந்த சுலோசனா சம்பத், இவர்களுக்கு சிறந்த ஊழியர்கள் என்ற பட்டமளித்து ஒரு வருட ஊதிய உயர்வும் கொடுத்தார். இப்போது தி.மு.க. ஆட்சி வந்தபிறகு, அ.தி.மு.க. கருங்காலிகளுக்குத் தரப்பட்ட ஊதிய உயர்வை ரத்து செய்ய வேண்டும்; வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கு 8 நாள் சம்பளப் பிடித்தம் செய்ததை திருப்பித்தரவேண்டும் முதலான கோரிக்கைகளை மின்துறை அமைச்சர் நேருவிடமும், தொழிலமைச்சர் பொன். முத்துராமலிங்கத்திடமும் முறையிட்டும் கூட இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இப்போது தி.மு.க.வினர் அன்றைய அ.தி.மு.க.வினரைப் போலவே கருங்காலி வேலை செய்து அதிகாரிகளின் செல்லப் பிள்ளைகளாகி விட்டனர். தங்களுக்குத் தேவையான சிறு சிறு சலுகைகளையும் பெற்றுக் கொள்கின்றனர். தட்டிக் கேட்க யாருமில்லாத தைரியத்தில் அதிகாரிகள் ஊழலில் கொழுக்கின்றனர். ஒவ்வொரு அதிகாரியும் தனது பினாமிகளை வைத்து காண்ட்ராக்ட் எடுத்து பல வழிகளிலும் கொள்ளையடித்து ஆலையையே திவாலாக்கி விட்டனர். இந்த காண்ட்ராக்டர்களுக்கு ஆலையிலேயே அனைத்து உபகரணங்களும் வழங்கப்படுவதோடு, நிரந்தரத் தொழிலாளிகளையே காண்ட்ராக்ட் வேலையைச் செய்யுமாறு நிர்பந்திக்கின்றனர். மறுத்தால் சஸ்பெண்டு செய்துவிடுவோமென தொழிலாளிகளை அதிகாரிகள் மிரட்டுகின்றனர்.

நிரந்தரத் தொழிலாளர்கள் ஒருபுறமிருக்க, நிரந்தரமற்ற (என்.எம்.ஆர்) தொழிலாளிகளும், காண்ட்ராக்ட் தொழிலாளிகளும் கொத்தடிமைகளை விடக் கேவலமாக நடத்தப்படுகின்றனர். அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச கூலியான ரூ.15-ஐக் கொடுத்ததாக காண்ட்ராக்ட் தொழிலாளியிடம் கையெழுத்துப் பெற்றுக் கொண்டு ரூ.10 தான் கொடுக்கின்றனர். ஏன் என்று கேட்டால் மிரட்டுவதோடு, வேலையில்லை என்று வெளியே தள்ளுகிறார்கள். அதே போல, நிரந்தரமற்ற தொழிலாளிகளை மூன்று மாதத்திற்கொரு முறை இடைவெளி விட்டு மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொண்டு நிரந்தரமாக்காமல் ஆண்டுக்கணக்கில் இழுத்தடிக்கிறார்கள்.

இப்போது மாயனூர் ஆலை கடந்த இரு மாதங்களாக ஆர்டர் இல்லை என்ற பெயரில் மூடிக் கிடக்கிறது. இந்த லட்சணத்தில், ''டான்செம்'' நிறுவனம் விருத்தாசலத்தில் மூன்றாண்டுகளாக மூடிக்கிடந்த பீங்கான் தொழிற்சாலையை வாங்கி, அதை நல்ல லாபத்துடன் இயக்கப் போவதாக கூறுகிறது. இதற்காக மாயனூர் ஆலையில் பணியாற்றும் ஒரு பிரிவு தொழிலாளர்களை விருத்தாசலத்திற்கு அனுப்பவும் முடிவு செய்துள்ளது. அந்தப் பீங்கான் ஆலை இயங்கினாலும் இயங்காவிட்டாலும் அதிகார வர்க்கத்தின் கொள்ளைக்கு இன்னுமொரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதுதான் உண்மை.

போலிக் கம்யூனிஸ்டுகள் பிதற்றுவது போல, அரசுத் துறை நிறுவனங்கள் சோசலிசத்திற்கான கூறுகள் அல்ல; அதிகார வர்க்கத்தின் கொள்ளைக்கும் அடக்குமுறைக்குமான நிறுவனங்களே என்பதை டான்செம் தெளிவாகவே நிரூபித்துள்ளது.

ஆட்குறைப்பு, வேலையின்மை, அதிகார வர்க்கத்தின் அடக்குமுறையால் அல்லறபடும் தொழிலாளர்கள் இனியும் ஓட்டுக்கட்சி சங்கங்களை நம்பியிராமல் புதிய, புரட்சிகரமான சங்கத்தைக் கூட்டியமைத்து உடனடியாகப் போராட வேண்டும். இல்லையேல், அதிகாரவர்க்கம் இருக்கின்ற கொஞ்சநஞ்ச உரிமைகளையும் பறித்து தொழிலாளிகளைக் கொத்தடிமைகளாக்குவதோடு, வேலையையும் பறித்து வீதியில் வீசியெறிந்து விடும்.

— வாசகர் வட்டம், மாயனூர்.

ிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
107-எ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094.